**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.2/2024

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. ஹரிராம் | வயது: 36 |
| த/பெ. : திரு. கிருஷ்ணன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி வங்கி மேலாளர் ஆஜர். 1,2 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி 1,2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி வங்கி மேலாளர். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 3.1.2019 – பிரதிவாதிகள் வாதி வங்கியில் கடன் கேட்டு கொடுத்த விண்ணப்பம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 4.1.2019 – பிரதிவாதிகளுக்கு வாதி வங்கி கடன் அனுமதித்தற்கான ஒப்புதல் கடிதம் | | **வா.சா.ஆ 2** |
| 5.1.2019 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி கடிதம் | அசல் | **வா.சா.ஆ 3** |
| 5.1.2019 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கொதவை ஒப்பந்தம் | அசல் | **வா.சா.ஆ 4** |
| 1.2.2019 – TN39CX7807 வாகனத்தின் பதிவு சான்றிதழ் | ஒளி நகல் | **வா.சா.ஆ 5** |
| 5.1.2019 – பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி கடிதம் | | **வா.சா.ஆ 6** |

| | | |
|---|---|---|
| 16.12.2023 – வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 7** |
| 18.12.2023 – பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய கவர் | | **வா.சா.ஆ 8** |
| 4.1.2019 முதல் 15.12.2023 வரை உள்ள பிரதிவாதிகளின் வங்கி கணக்கு பரிமாற்ற விவரங்கள் | கணினி நகல் | **வா.சா.ஆ 9** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.02.01 16:28:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.